**20.11.2025**

**MCOP.No.109/2017**
**ம.சா.1 : மகேந்திரன்**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் இந்த விபத்தை நேரில் பாக்கவில்லை என்றால் சரிதான். 14.01.2015க்கு பின்னிட்டு சின்னசாமி தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னசாமி இயற்கையான முறையில் தான் இறந்தார் என்றால் மன உளைச்சலில் தான் இறந்தார். அவர் 2018ல் தான் இறந்தார். அவர் இறந்ததற்கு சின்னசாமிக்கு சடலக்கூறாய்வு எதுவும் செய்யப்படவில்லை. மேற்படி விபத்திற்கு அவர் தான் காரணம் என்பதால் தான் 7 நாட்கள் கால தாமதாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் விபத்து ஏற்பட்டபோது நான் மருத்துவமனையிலேயே இருந்ததால் என்னால் புகார் கொடுக்க கால தாமதம் ஏற்பட்டது. எனது மனுவிலோ மற்றும் நிருபண வாக்குமூலத்திலோ மேற்படி கால தாமதத்திற்கான காரணத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் சின்னசாமியின் ஓட்டுநர் உரிமம், இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்று மற்றும் காப்பீடு சான்று ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

2) இந்த விபத்து சமயத்தில் லாரி ஓட்டுநர் நிதானமாகவும் கவனமாகவும் ஓட்டி வந்தார் என்றும் எனது அப்பா தான் கவனக்குறைவாக திடீரென்று சாலையை கடக்க முயன்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் பள்ளியில் இருந்தேன். தகவல் கிடைத்து தான் நான் சென்றேன். மேற்படி விபத்து சமயத்தில் எனது அப்பா மாதம் 10000 சம்பாதித்தார் என்று சொல்வபதற்கும் அவருடைய வயதை நிருபிக்கவும் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் வயதின் மூப்பின் காரணமான அவர் எவ்விதமான வேலையும் செய்யாமல் எங்களை சார்ந்திருந்தார் என்றும் மனுவிற்காக இறந்து போன சின்னசாமியை நாங்கள் சார்ந்திருந்தோம் என்று சொல்லி உள்ளோம் என்றால் சரியல்ல.எனது அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையும்

குற்ற பத்திரிக்கை மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இந்த மனுவில் லாரியின் ஓட்டுநரையும் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஒப்படைத்துள்ள மருத்துவ பில்களில் ம.சா.ஆ.11 ரூ.1,55,334ல் ரூ.1,45,594 மட்டுமே முறையாக உள்ளது என்று சொன்னால் நீதிமன்றம் சொல்வதுபோல கேட்டுகொள்கிறேன். இந்த விபத்து எனது அப்பாவின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையால் தான் நடைபெற்றதாலும் அவருடைய வயதின் மூப்பின் காரணமாக இறந்ததாலும் இந்த இழப்பீடு மனுவில் எவ்வித இழப்பீடும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.20 17:57:22 +0530

**Accidents Claim Tribunal, Attur.**